வாய்ப்பிருக்கின்றது. நான் ஏற்கெனவே சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேசும்போது இதைக் குறிப்பிட்டேன். வேலையில்லாத இளைஞர்கள், விளிம்பு நிலையில் வாழக்கூடிய மக்கள் யாராக இருந்தாலும், பால் மற்றும் பால் உபபொருட்களை விற்பனை செய்யும் முகவர்களாக விரும்பினால், அதற்கான அனுமதியை நாங்கள் தாராளமாக வழங்கி வருகின்றோம். அதுபோன்று அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் முன்வந்தால் அதை நாம் வழங்குவோம். எனவே, குறிப்பிட்ட இலக்கை அடைகின்ற நேரத்தில், கண்டிப்பாக அந்தப் பகுதியில் பால் உபபொருட்கள் தயாரிக்கின்ற மையங்கள்/நிறுவனங்களை ஏற்படுத்துதல், புதிதாக Bulk Milk Coolers அமைத்தல், புதிதாக கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்குதல் போன்று எது வேண்டுமானாலும் தொடங்குவதற்கு ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்வாகம் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

110—

முதலைப் பண்ணை

***38078—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, அணைக்கரை பகுதியில் முதலைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சரகம், அணைக்கரையில் முதலைகள் பாதுகாப்பு மையம் (Crocodile Conservation Centre) 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று இந்த ஆண்டிற்கான வனத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், அணைக்கரையில் முதலைகள் பாதுகாப்பு மையம் அமைக்க 2.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரியலூர் மாவட்டம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் ஆகியவற்றை இணைக்கின்ற கொள்ளிடம் ஆறு, அணைக்கரை கீழணையில், வடபுறம், தென்புறம் என்று இரண்டாகப் பிரிந்துள்ளது. இரு பகுதி ஆறுகளிலுமே முதலைகள் அதிகமாக உள்ளன. அந்த முதலைகளால் பொது மக்களுக்கும், மீனவர்களுக்கும், கால்நடைகளுக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே, இரண்டு பகுதிகளிலுமே முதலை பாதுகாப்பு மையம் அமைக்கப்படுமா என்பதையும், அந்த மையம் எப்போது அமைக்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முதலை பாதுகாப்பு மையம் (Crocodile Conservation Centre)தான் அமைக்கப்படவுள்ளது. அதுமட்டுமல்லாமல், அங்கு மழைக் காலத்தில் அதிக முதலைகள் வரும்போது—இந்தப் பணிகள் முடிவடையும்வரை, பக்கத்திலுள்ள சாத்தனூர் முதலைப் பண்ணையில் முதலைகளை விடுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.

2024 ஜூன் 27]

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் நெல்லும், தோட்டக்கலை பயிர்களும் அதிகமாக சாகுபடி செய்யப்படுகின்றன. தற்போது குரங்கு, மயில், காட்டுப் பன்றிகள் மற்றும் மான்கள் ஆகியவற்றின் இனப்பெருக்கம் அதிகமாகி, விவசாயிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரங்குகளைப் பொறுத்தவரைக்கும் எங்கு தொந்தரவு இருக்கிறதோ, அங்கிருக்கிற மாவட்ட வன அலுவலர் அவர்களிடம் தெரிவித்தால், கூண்டுகள் அமைக்கப்பட்டு, அந்தக் குரங்குகளைப் பிடித்து மீண்டும் வனப் பகுதியில் விடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மயில்களைப் பொறுத்தவரைக்கும், அது* Schedule-I bird. *அதுமட்டுமல்லாமல், நம்முடைய* National bird *என்பதனால் அதற்கான எந்தவொரு திட்டமும் தற்போது இல்லை. இருந்தாலும் நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் மயில், வன உயிரின பாதுகாப்புப் பறவை என்பதால்* Salim Ali Centre for Ornithology and Natural History *என்ற* Institute *மூலமாக மனித-மயில் மோதல்களைத் தடுப்பதற்காகவும், விளைநிலங்களில் பயிரிடப்படும் பயிர்களைப் பாதுகாப்பதற்காகவும், சேதங்களைக் குறைப்பதற்காகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]